# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் உசு | திருவள்ளுவர் யாண்டு ககஅக<br>விகிருதி—ஆடி<br>1950—ஜூலை | மலர் ச |

## திருவாவடுதுறை ஆதீனத் தெய்வத்திரு. மகாசந்நிதானம் அவர்கள் வருகை.

நம் ஆனித் திங்கள் தமிழ்ப்பொழிலில் விளம்பரம் செய்திருந்தபடி, திருவாவடுதுறை ஆதினத்து இருபதாவது பட்டத்தில் எழுந்தருளி அருட்செங்கோல் செலுத்தி முதலமைச்சர் திருவாளர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கட்கு ஆட்சிநெறிச் செங்கோல் அளித்தருளிய தெய்வத்திரு. அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள், விகிருதி, ஆனி, ச-ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை திருவிடைமருதூரிலிருந்தும் எழுந்தருளி, மறுநாள் திருநல்லூரில் தங்கி, அங்கிருந்தும் போந்து அன்றிரவு ஐயன்பேட்டையில் ஊர்வலமாக எழுந்தருளி அடியவர்கட்கு அருட்காட்சி தந்து, செவ்வாய்க் கிழமை அங்கு அடியார் பூசை முடித்து, அன்றுமாலை தஞ்சைக்கு எழுந்தருளினார்கள்.

மகாசந்நிதானம் அவர்கள் தஞ்சை எல்லையை அடைந்ததும், கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் இராவ் பகதூர் திருவாளர் ஆ. யா. அருளானந்தசாமி நாடார் அவர்கள் முதலான பெருமக்கள் எதிர்கொண்டழைப்ப, மகாசந்நிதானம் அவர்கள் அவர்கட்கெல்லாம் ஆசிகூறியருளி, பள்ளியகரம் திருவருளகத்திற்கு எழுந்தருளி, திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள் செய்த அன்பு வழிபாட்டை ஏற்றருளினார்கள். மகாசந்நிதானம் அவர்கள் அங்குப்பூசைமுடித்துக்கொண்டு மாலை 8 மணியளவில் சிவிகையில் எழுந்தருளிப் பள்ளி

யகரவீதி வலமாகத் திருவுலாப்போந்து, கரந்தைக்கு எழுந்தருளி கருவூலநாதர் பெரியநாயகியம்மை திருக்கோயில் வீதிகளை வலமாகவந்து கடைத்தெருவழியாக இரவு ௰௨ மணியளவில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு எழுந்தருளித் தமிழ்ப் பெருமன்றத்தில் கொலுவீற்றிருந்து அன்பர்கட்கு அருட்காட்சி தந்தருளினார்கள்.

மகாசந்நிதானம் அவர்கள் அருட்டிறத்தில் ஈடுபட்டுள்ள கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் அவ்வருட்டிறத்தைப் பாராட்டித் தம் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு நல்வரவேற்பு விண்ணப்பித்து மகிழ்ந்தார்கள்.

அடுத்தநாள் புதன்கிழமை தஞ்சையில் மாட்சிமிக்க சரபோசி மன்னர் அவர்கள் அரிதிற் றேடித் தொகுத்து வைத்த பல்கலை நூல்நிலையமாகிய சரசுவதி மகாலுக்கு மகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளிப் பார்வையிட்டு மன்னர் மாட்சியைப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

பின்னர், தஞ்சை அரசர் பரம்பரை உயர்திரு. இராஜா ஸ்ரீ ராஜாராம் ராஜா சாகேப் சத்திரபதி அவர்கள் வேண்டுகோட்கிணங்கி மகாசந்நிதானம் அவர்கள் அரண்மனைக் கொலு மண்டபத்திற்கு எழுந்தருள, சத்திரபதி அவர்கள் மகா சந்நிதானம் அவர்களை அன்போடு வரவேற்று மகிழ்ந்தார்கள். ஆண்டுக் குழுமியிருந்த அன்பர்களுக்கெல்லாம் காட்சிதந்து ஆசிவழங்கி, மகாசந்நிதானம் அவர்கள் சிவிகை ஊர்ந்து இசை வல்லுனராகிய திருவினர், அ. இ. வே. கா. நா, சக்கரவர்த்தி T N. இராசரத்தினம் பிள்ளை, வீருசாமி பிள்ளை, திருவெண்காட்டுச் சுப்பிரமணிய பிள்ளை, திருவீழிமிழலை உடன்பிறந்தார்கள் முதலான இசைப்புலவர்கள் தம் தம் திறன் காட்டத் தொண்டர் குழாம் திருமுறை ஓதிப் புடை சூழ்ந்து வரக் கண்டார் கண்கள் களிகூரச் சிவபரம்பொருளே என்னத் திருவுருக் காட்டி அரசவீதி நான்கிலும் திருவுலாப் போந்து, விடியற் பொழுது ௪ மணியளவில் கொலுமண்டபம் சேர்ந்து கொலுவீற்றிருந்து அன்பர் வழிபாடு ஏற்று அருட்கண் சார்த்தி உய்வித்தார்கள்.

மறுநாள் வியாழக் கிழமை மாலை தஞ்சைக் கலியாண சுந்தரம் உயர்நிலைப் பள்ளிக் கெழுந்தருளி, திருவாளர்

இராவ் பகதூர் ஆ. யா. அருளானந்தசாமி நாடார் அவர்கள் முதலான அன்பர்களால் வரவேற்கப்பெற்று, உயராசனத் திருந்து, மாணவர் அணிவகுத்து ஏகல், உடற்பயிற்சி வகை, விளையாட்டு வகை முதலானவைகளைக் கண்டருளி, பள்ளியின் சார்பாகத் திரு. நாடார் அவர்கள் படித்துத் தந்த வரவேற்பு விண்ணப்பத்தை ஏற்றருளி, மகா சந்நிதானம் அவர்கள் கல்வித் துறையில் ஆவன வெல்லாம் செய்யவும் தஞ்சையில் ஒரு கலைக் கல்லூரி நிறுவவும் தாம் கொண்ட கருத்தினை வெளிப்படுத்தியருளினார்கள்.

பின்னர், தஞ்சைக் காய்கனி வர்த்தக சங்கத்தார் வேண்டுகோளின்படிச் செல்வ விநாயகர் கோயிலுக்கு எழுந்தருளிக் கொலு வீற்றிருந்து சங்கத்தார் வரவேற்பு விண்ணப்ப உரைகளுக்குச் செவி சாய்த்தருளி, அவர்கள் செய்திருந்த சிறந்த முறையான ஏற்பாடுகளைப் பாராட்டி மகிழ்ந்து, சங்கத் தலைவர் திரு. ப. சாமி. வேங்கடகிருஷ்ண பிள்ளை அவர்கள் முதலான அன்பர்களுக்கெல்லாம் ஆசி அருளிப் பின்னர்த் தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயி லுக் கெழுந்தருளிக் கோயிலை வலம் வந்து, பெருவுடையாரை வணங்கி, கோயில் உட்சுற்றி லுள்ள இராசராசன் காலத்து உயர் ஓவியங்களைக் கண்டு பாராட்டி மகிழ்ந்து, அருட்சத்தியாகிய பெரியநாயகி யம்மையை வணங்கித் திருக்கோயிலி லிருந்தும் எழுந்தருளி, மேலவீதியில் அறம் வளர்த்தாளாகிய காமாட்சியம்மையை வணங்கிப் பின்னர்க் கரந்தையில் சொக்கலிங்கப்பெருமானையும் மீனாட்சியம்மையையும் வணங்கிச் சங்கத்திற்கு எழுந்தருளினார்கள்.

அடுத்த நாள் வெள்ளிக் கிழமை, நிகழ்ச்சிக் குறிப்பில் கண்டபடி வழிகள் தோறும் குழுமியிருந்த அன்பர்களுக் கெல்லாம் காட்சி தந்து அருள்பாலித்துக்கொண்டு, வல்லம் போகும் சாலையில் புதிதாக நிறுவ விருக்கும் கலைக் கல்லூரிக்கு இராவ் பகதூர் திருவாளர் ஆ. யா. அருளானந்தசாமி நாடார் அவர்களும், திருவாளர் நீ. கந்தசாமி பிள்ளைஅவர்களும் உதவ இருக்கும் இடங்களைத் திருக் கண் சார்த்தி, அன்பர் குழாத்துடன் படம் பிடித்துக் கொண்டு, பின்னர்த் திருவாளர் V. நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் வேண்டுகோளின்படி அவர்களது 'நீலா விலாச' மாளிகைக்கு எழுந்தருளி அவர்கள் ஆற்றிய வழிபாடேற்று

அருள்பாலித்துத் தொண்டர் குழாத்துக்கு அமுது செய்வித்து, அங்கிருந்தும் திரு. நாடார் அவர்களது பூங்காவிற்கு எழுந்தருளி அவர்கள் நல்வரவேற் பேற்று ஆசியருளித் தோட்டச் சிறப்பினைக்கண்டு மகிழ்ந்தருளித் தொண்டர் குழாத்திற்குச் சிற்றுண்டியருளி, அங்கிருந்தும் திரு. நாடார் அவர்கள் தம் மாளிகையில் ஆற்றிய சிறப்பினை யேற்று, பூக்காரத்தெரு சுப்பிரமணியக்கடவுளை வணங்கி, மாநோம் புச்சாவடி வழியாகப் போந்து அடியார்கள் வழிபாடு ஏற்றுக், கீழைவாயில் வெள்ளைப்பிள்ளை யார்கோவிலுக்கு எழுந்தருளித் திருவாளர் L. S. M. கந்தசாமி பிள்ளை அவர்கள், நா. லெ. வரதராஜலு நாயுடு அவர்கள் முதலியோர் எதிர்கொண்டு வணங்கி வரவேற்க, ஆசி கூறிப் பிள்ளையாரை வணஙகி, அங்கிருந்தும் போந்து, குறிச்சித்தெரு சுப்பிரமணிய சுவாமியை வணங்கி அன்பர்கள் விண்ணப்பித்த வரவேற்பினை ஏற்று அன்பர்களுக்கெல்லாம் அருள்பாலித்தார்கள். தெருக்கள் தோறும் மணித் தோரணம் கட்டி வீடுகள்தோறும் நிறை குடம் வைத்து வழிபாடு இயற்றிய சிறப்பு, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

மறுநாள் சனிக்கிழமை மாலை சங்கப் பெருவெளியில் அமைந்த மணிமண்டபத்தில் மகாசந்நிதானம் அவர்கள் கொலுவீற்றிருந்து தெய்வத்திரு. அம்பலவாண தேசிகர் கல்வி நிலைய மாணவர்கள் நிகழ்த்திய பேச்சுத்திறன், இசைத்திறன், நடிப்புத்திறன் முதலியவற்றைக் கண்டருளி மாணவர் மாண்பினை உளங்கொண்டு ஆசியருளிக் கல்வி நிலையங்களின் மேம்பாட்டு நலனைத் திருவுளங் கொண்டருளினார்கள்.

அம்பலவாண தேசிகர் நடுநிலைப்பள்ளியில் நான்காம் படிவம் திறந்தருளி உயர்நிலைப் பள்ளியாக மேம்படுத்தியருளினார்கள்.

பின்னர்க் கரந்தைக் கருவேலநாதர் கோயிலுக்கு எழுந்தருளினார்கள். திரு. R. மாணிக்கஞ் செட்டியார் அவர்கள் முதலான அன்பர்கள் மகாசந்நிதானம் அவர்களை வரவேற்று அழைத்துச்செல்ல, மகாசந்நிதானம் அவர்கள் கருவேலநாதரையும், பெரியநாயகியம்மையையும் வணங்கினார்கள். கோயிலை வலம் வந்து கோயிலுக்கு வடக்கி

லுள்ள திருவாவடுதுறை ஆதீன வெளியிடத்தையும் திரு மண்டபத்தையும் கண்ணுற்றருளி அதனைப் புதுக்கும் முறையை வகுத்தருளினார்கள்.

அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை வைகறைப் பொழுதில் மகாசந்நிதானம் அவர்கள் தஞ்சைக்குக் கீழ்த்திசையில் உள்ள சத்தி வடிவாகிய மாரியம்மன் கோயிலுக்கெழுந்தருளி வணங்கி ஏழைகளுக்கு உணவளிக்கச் செய்தார்கள். மாரியம்மன் கோயில் புதுப்பித்தற் செலவுகளுக்காக மகாசந்நிதானம் அவர்கள் ஐயாயிரம் வெண்பொற்காசு உதவியருளிய நற்செய்தி இங்குக் குறிப்பிடத் தக்கது.

அன்று மாலை மகாசந்நிதானம் அவர்கள் சிறப்பாகத் தமிழுலகிற்கும் சைவ உலகிற்கும் பொதுவாக உலகத்திற்கும் செய்துவரும் பலதிறப்பட்ட அறப் பணிகளையும் உதவிகளையும் இக்கால நிலைக்கேற்ப விளம்பரம் செய்து பாராட்டி யாவரும் அறியும் வகையில், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ஒரு பாராட்டுவிழா நிகழ்ந்தது. பேரறிஞர்களும் பெருந்தகையர்களும் தொண்டர்களும் ஏனையரும் பெருந்தொகையினராகக் குழுமியிருந்தார்கள். தஞ்சைப் பிற்போக்காளர் முற்போக்காளராகிய திருவாளர் M. பாஸ்கரத் தொண்டைமான், M. A., அவர்கள் மகாசந்நிதானம் அவர்கள் பெருமையினைப் பாராட்டி, 'இறை வழிபாடும் கோயிலும்' என்னும் பொருள்மேல் கோயில் அமைப்பின் கருத்துக்களையும் இறை வழிபாட்டின் சிறப்பினையும் விரித்தோதித் தற்காலத் தவற்றெண்ணங்களை மாற்ற வேண்டிய இன்றியமையாமையை எடுத்துரைத்தார்கள். பின்னர், சென்னை நகராட்சி முன்னாள் பெருந்தலைவர் திரு. S. இராமசாமி நாயுடு அவர்கள், தஞ்சை நாட்டாண்மைக் கழகத் தலைவர் திரு. V. நாடிமுத்துப் பிள்ளை அவர்கள், திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள், கரந்தைக் கவியரசு திரு. R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் முதலான பேரன்பர்கள் விரிவாகப்பேசி மகாசந்நிதானம் அவர்கள் பெருமையினையும் அறப்பணிச் சிறப்பினையும் பலபடியாக விதந்து பாராட்டிப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள். திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள், மகாசந்நிதானம் அவர்கள் சங்கக் கல்வி நிலையங்களை ஏற்று நடத்தும் பேருதவிக்கும் சங்கப்பணிகள் நாளும் நாளும் வளர்ந்

தோங்கச் செய்யவிருக்கும் பெருந்துணைக்கும் நன்றி பாராட்டிச் சங்கத்தார் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அடுத்தநாள் திங்கட்கிழமை, மகாசந்நிதானம் அவர்கள் தஞ்சை மகாராட்டிர இலவசப்பள்ளிக்கு எழுந்தருளி அப்பள்ளிப் பெற்ரோர் சங்கத்தினரும், ஆசிரியக் குழுவினரும் விண்ணப்பித்த வரவேற்பினைப்பெற்று ஆசி வழங்கி நகராண்மைக் கழகத்திற்கு எழுந்தருளினார்கள். தஞ்சை நகராண்மைக் கழகத்தார் இதுவரை செய்திராத ஒரு பெருஞ்சிறப்புச் செயலை ஆற்றி மகிழ்ந்தார்கள். அன்று மாலை மகாசந்நிதானம் அவர்களை நகராட்சிப் பெருமன்றத்தில் வரவேற்றுத் தம் மனமார்ந்த அன்புரைகள் நிரம்பிய வரவேற்பினை விண்ணப்பித்தார்கள். இவ்வன்பினை உளமார ஏற்றுக்கொண்ட மகாசந்நிதானம் அவர்கள் அருட்குறிப்பை வெளிப்படுத்தும் முகத்தான் சென்னை திரு. S. இராமசாமி நாயுடு அவர்கள் மகாசந்நிதானம் அவர்கள் பெருமகிழ்ச்சியைத் தெரிவித்ததுடன் தஞ்சையில் ஒரு கலைக் கல்லூரி நிறுவுவதற்கு மகாசந்நிதானம் அவர்கள் திண்ணமாக எண்ணங்கொண்டிருப்பதாகவும் இத்தகைய நற்பணிகளில் இயல்புள்ள பெருந்தகையாளர்களாகிய பொது மக்கள் பேரூக்கங் கொண்டு பெரும் பங்கு எடுத்துக்கொள்ள முன்வர வேண்டுமென்றும், அங்ஙனம் முன் வந்தால் எத்தகைய பெரும் பணியும் எளிதில் நிறைவேறக் கூடுமென்றும், சமயப் பணியையே சிறப்புப் பணியாக ஏற்றுக்கொண்டிருக்கும் மகாசந்நிதானம் அவர்களைப் போன்ற துறவிமார்கள் ஒரு சிற்றளவிலே தான் இயற்றலாகுமெனவும், பெரும் பகுதியை வணிகர், வேளாளர்களில் பெருந்திருவினர் மனஞ்செலுத்திக் கருத்துக்கொண்டு பணியாற்ற வேண்டியது இன்றியமையாதது எனவும் வற்புறுத்திக் கூறினார்கள்.

பின்னர் மகாசந்நிதானம் அவர்கள் அங்கிருந்தும் இராவ் பகதூர் இராமநாதன் செட்டியார் மன்றத்துக்கெழுந்தருளிக் கொலுவீற்றிருப்பப், பெருந் திரளான மக்கள் கண்டுகளித்து அருள் பெற்றுப் பேறுற்றார்கள்.

ஸ்ரீ சுதர்சன சபையார் மகாசந்நிதானம் அவர்கள் தஞ்சைக்கு எழுந்தருளி அருள்பாலித்த திறத்தையும் தஞ்சையில் கலைக்கல்லூரி அமைத்து மக்கள் பெருங்குறை முடிக்கத் திருவுளங்கொண்ட அருட்டிறத்தினையும் வியந்து பாராட்டி வரவேற்பு விண்ணப்பம் செய்து கொண்டார்கள்.

பின்னர் அம்மன்றத்திலேயே மாநோம்புச்சாவடி மகிழ்ந்து வாழ்வோரும், ரோட்டரிக் குழுவினரும், மகாசந்நிதானம் அவர்களைப் புகழ்ந்து பாராட்டி வரவேற்றார்கள்.

மகாசந்நிதானம் அவர்கள் ஆணைபெற்றுத் திருவாளர் இராமசாமி நாயுடு அவர்கள் மகாசந்நிதானம் அவர்கள் அருண்மொழிகளை அன்பர்களுக்கு அளித்தார்கள்.

மகாசந்நிதானம் அவர்கள் அங்கிருந்தும் எழுந்தருளிப் பெருந்தனக்காரர் திரு. மா. சாமிநாத பிள்ளையவர்கள் வழிபாட்டை ஏற்று ஆசியருளி, மேலவீதி ஸ்ரீ குமரகான சபையார் வரவேற்பு விண்ணப்பத்தை ஏற்றருளி அருள்மொழி கூறி அங்குள்ள விநாயகரைப்போற்றினார்கள்.

இங்ஙனமாகத் தம் திருவுலாவைச் சிறப்பாக நிறைவேற்றிய பின்னர் மகாசந்நிதானம் அவர்கள் தமிழ்ப்பெருமன்றத்தில் கொலுவீற்றிருந்து அன்பர்கட்கும் அடியார்கட்கும் அருளுரை தந்து ஏற்றவாறு வரிசை செய்து அருள்பாலித்து வைகறைப் பொழுதில் பூசை முடித்துக்கொண்டு அடியார்களுடைய உண்மை வழிபாடும் வணக்கமும் ஏற்றுப் பிரியாவிடை தந்து ஆதீனம் சேரும் வகையில் எழுந்தருளி, செவ்வாய்க்கிழமை பகல் திருநல்லூரில் தங்கி மாலை திருவிடைமருதூரில் நலனே எழுந்தருளினார்கள்.

மகாசந்நிதானம் அவர்கள் தஞ்சையில் எழுந்தருளியிருந்த பொழுது ஒவ்வொருநாளும் காலையில் அன்பர் அடியவர்கட்குக் காட்சியளித்து அறிவு தந்த சிறப்பும், நண்பகலில் இறைவழிபாடு செய்து தொண்டர் குழாத்தினைத் தூய்மைசெய்த பண்பும், மாலைப் பொழுதில் திருவுலாப்போந்து அன்பர்களையும் அடியவர்களையும் ஏனைய பொதுமக்களையும் மகிழ்ந்து உளங்கனியச் செய்த கொள்கையும், சைவமக்களுக்கு அன்புப் பெருக்கும், ஏனைய கடவுட் கொள்கையினார்களுக்கு அறிவுப் பெருக்கும், அல்லார்க்கு ஒரு புத்துணர்ச்சியும் தந்தன,

மகாசந்நிதானம் அவர்களின் திருமேனிப் பொலிவிலும், திருவுரை யமுதிலும், திருவுளப் பாங்கிலும் ஈடுபடாத மக்கள் இலரென்றே சொல்லலாம்.

மகாசந்நிதானம் அவர்கள் 'சைவசமயமே சமயம்' என்னும் கொள்கை உடையவர்கள்; 'விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கேற்ற தாகும்' என்னும் பரந்த கருத்துடையவர்கள். இதனாலேயே எவ்வகைச் சமயத்தாராலும் எவ்வகைக் கொள்கையினராலும் மகாசந்நிதானம் அவர்கள் பாராட்டப் பெறுகிறார்கள்.

அறநிலையப் பொருள்களை நன்கு பாதுகாத்துச் செய்வன வற்றைத் திருந்தச்செய்யும் ஆற்றலில் மகாசந்நிதானம் அவர்கள் திறமையும் புகழும் வாய்ந்தவர்கள். இதனாலேயே எல்லாரு டைய பாராட்டுக்கும் உரித்தானவர்களாக விளங்குகிறார்கள்.

மகாசந்நிதானம் அவர்கள் தஞ்சையில் எழுந்தருளியிருந்த ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பெருந் திருவிழாவாகவே இருந் தது. அருட்காட்சி, அன்னதானம், அடியார் பூசை, திருவுலாக் காட்சி எல்லாம் இரவும் பகலும் இடைவிடாதிருந்தன. நிகழ்ச்சி களெலாம் முன்னர்க்குறிப்பிட்டபடியே முறைதவறாது சிறப்புக் குன்றாது நடைபெற்றன. இத்துணைச்சிறந்த முறை ஏதொரு குறைவுமின்றி நிகழ்வதற்கு அடிப்படையான காரணராயிருந்த வர்கள் சங்க அமைச்சர் திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்களும், சங்கத்தொண்டர் திரு. சிவ. தட்சணாமூர்த்திப் பிள்ளை அவர்களும், சங்கத்தலைவர் இராவ் பகதூர் திரு. ஆ. யா. அருளானந்தசாமி நாடார் அவர்களும் ஆவார்கள்.

திருவாளர் நாடார் அவர்கள் பணி சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. தடுக்க முடியாத சொந்த அலுவல்களையும் பொருட் படுத்தாது ஒவ்வொரு நாளும் இராப் பகலும் ஒவ்வொரு வேளை யும், ஒவ்வொரு பொழுதும் மகாசந்நிதானம் அவர்கள் நலத்திற் கண்காணிப்பாக இருந்துவந்த சிறப்பு இணையற்றதாகும். இத் தகைய பெருந்தகையார்க்குத் தமிழ் மக்கள் யாவரும், சிறப் பாகச் சைவ மக்கள் பெரிதும் நன்றிபாராட்டும் கடப்பாடு டையராவர். நலம்.

# பட்டினத்துப் பிள்ளையார்.

சித்தாந்த கலாநிதி. ஔவை. சு. துரைசாமி, அண்ணாமலை நகர்.

(முற்றொடர்ச்சி: துணர் உசு, மலர் உ, பக்கம் 54)

இத்தத்துவ ஆராய்ச்சி நெறியால் தன்னை யறிவதும், அதனால் தலைவனான சிவனையறிவதும் வேண்டும் என்பர்; "தன்னை யறியத் தலைப்படும் தலைமகன்" என்றும் சான்றோர் கூறுவர். அத்துறையில் சென்று தற்காண்டல் முயற்சியில் ஈடுபட்ட பிள்ளையார், உடலை, மயிர், தோல், புண், குருதி, எலும்பு, எலும்பிடையுள்ள மூளை விழுது, அதனுள் ஒழுகும் வழும்பு, புழு, மலம், நரம்பு, பிணி எனப் பகுத்துக்கண்டு, "இன்னது யானென் றறியேன் என்னை, எங்குந் தேடினன் யாதிலும் காணேன்" (திருவிடை. 13) என வுரைப்பர். உடற் கூற்றாராய்ச்சியையும் தெரிந்தது கொண்டு தெரியாதது காண்டல் வகையில் மயிர் தோல் முதலிய புறப்பொருளி னின்றும் அகப்பொருளை நாடிக் காணும் முறை இவர்பால் அமைந்திருப்பதும், தசையைப் புண்ணெனத் திருவள்ளுவர் கூறியது கொண்டு, தாமும் புண்ணெனக் குறிப்பதும் குறிக் கத்தக்கன வாகும்.

இவ்வண்ணம் திருவருள் வாழ்வும் உலகியற் காட்சியும் இனிது பெற்று இறைவனைச் சிந்தையிற் கண்டு விளங்கும் பிள்ளையார், ஏனையோரைக் கண்டு மன மிரங்கி, 'எம்ம னோர்கள் (இறைவனாகிய கனியை) இனிதின் அருந்திச் செம் மாந்திருப்பச் சிலர் இதின் வாராது, மனத்தைப் பாழாக்கி, பொய்யும் பாவமும் கொடுமையும் துன்பமும் பெருக்கி, "மரணம் பழுத்து நரகிடைவீழ்ந்து, தமக்கும் பிறர்க்கும்

உதவாது. இமைப்பிற்கழியும் இயற்கையோராய்'' (திருவிடை 10) உள்ளனர் என இரங்கிக் கூறுகின்றார்.

இனி, இவர்க்கு மாறாகக்கடுந்தவம் மேற்கொண்டு உடலை வருத்தும பிறரையும் காண்கின்றார். அவர்கள் மனைவி மக்களைத்துறந்து காடு மலைகளையடைந்து மழையென்றும் வெயிலென்றும் பனியென்றும் பாராது நீர் பலகால் மூழ்கி, நிலத்திற்கிடந்து சடைபுனைந்து, உடை துறந்து உண்ணு நோன்பு கொண்டும், காயும் கிழங்கும் காற்றுதிர் சருகும் உண்டும் இயல்பாகவே தனர்தற்குரிய யாக்கையைத் தளர்வித்து "அம்மை முத்தியடைவதற்காகத், தம்மைத் தாமே சாலவும் ஒறுப்பர்'' (திருவிடை 19.) இவ்வாறன்றி. இல்லிருந்து நல்லன நுகர்ந்து. கொள்வன கொண்டு கொடுப்பன கொடுத்துப் பூசுவது பூசி. புனைவன புனைந்து "ஐந்து புலன்களும் ஆராஆர்ந்து, மைந்தரும் ஒக்கலும் மகிழ மனமகிழ்ந்து. இவ்வகை'' யிருந்தும், திருவைந்தெழுத்தை மறவாது சிந்தையைச் சிவன்பால் சேர்த்திருப்பார்க்கும் கடுந்தவம் செய்வோர் பெறும் பேரின்பம் இனிது எய்தும் என்று கூறி, இதனை விளக்குவாராய். "வல்லானொருவன் கைம்முயன்றெறியினும், மாட்டாவொருவன் வாளா எறியினும், நிலத்தின் வழாஅக் கல்லே போல, நலத்தின் வழாஅர் நின் நாமம் நவின் றோரே'' (திருவிடை 19.) என்று கூறுவர், பிறிதோரிடத்தில், இவ்வுலகம் நின்னுடையது. இதன் கண் நிகழும் நன்மை தீமைள் யாவும் நின்னுடையவே; ஆதலால், இதன் கண் வாழும் யான்.

"பத்தி யென்பதோர் பாடு மின்றிச்
சுத்தனும் இன்னும் தோன்றாக் கடையே, நின்னை
இறைஞ்சில னாயினும் ஏத்தில னாயினும்
வருந்தில னாயினும் வாழ்த்தில னாயினும்
கருதி யிருப்பன் கண்டாய்'' (திருவிடை 28.)

என்று கூறுவதும், தாம் இறைவன் திருவருள் வழி நிற்றலால், தம்செயல் யாவையும் இறைவன் தன் செயலாய் என்று

கொள்ள வேண்டுமெனவும், தன்னை நினைத்தற்குரிய நெறியில் நினைக்குமாறு செய்ய வேண்டுமெனவும் வேண்டுவாராய் "மனம் மருண்டு, புன்மையினினைத்துப் புலன் வழிப்படாரினும் நின்வயின் நினைந்தே மாகுதல் நின்வயின், நினைக்குமா நினைக்கப்பெறுதல் அனைத்தொன்றும் நீயே யருளல் வேண்டும்" கோயில். 32) என்று கூறுவதும் பிறவும் (கழுமல?) அவர் சிவன் முத்தாய் வாழ்ந்த குறிப்பைப் புலப்படுத்துகின்றன.

இத்தகைய இயல்பினையுடையார்க்கு இறைவன் தொண்டராய்த் தொண்டு படுவதில் பெரு விருப்பும் இயற்கையாக வந்து அமைவனவாம். பெருவிருப்பத்தை "நின் சீரடியார் தம் சீரடியார்க்கு, அடிமை பூண்டு நெடுநாட்பழகி குடலை யாக்கையொடு புடைபட்டொழுகி அவர் கால் தலை யேவல் என் நாய்த்தலையேற்றுக் கண்டது காணினல்லது ஒன்று உண்டோ மற்றெனக்குள்ளது பிறிதே" (திருவிடை 7) என்பதனாலும், பெருமிதத்தை. "அம்பலக் கூத்தனுக்கு அன்பு செய்யா மிண்டர் மிண்டித்திரிவார். எனக்கு என் இனி நான் அவன் தன், தொண்டர் தொண்டர்க்குத் தொழும்பாய்த் திரியத் தொடங்கினனே" (கோயில் 38) என்பதனாலும் வெளிப்படுத்துகின்றார்.

இப்பெற்றியோர்க்கு எதன்பாலும் விருப்பு வெறுப்புக் கிடையாது. அவர்கள் துறக்க வாழ்வும் நரக வாழ்வும், பிறர் கண்டு தம்மை நல்லரெனினும் தீயரெனினும், செல்வ வாழ்வும் வறுமை வாழ்வும் குன்று இளமையே எய்தினும் இன்றே இறக்கலுறினும் எல்லாம் ஒன்றாய்க்கருதி, "வேண்டலுமிலனே வெறுத்தலுமிலனே" (கோயில் 36) என்று இருப்பர்; "பிறிதொன்றில் ஆசையின்றி இருந்தேன் இனிச் சென்றிரவேன் ஒருவரை யாதொன்றுமே" (திருவிடை 3) என்ற துணிவுடனே ஒழுகுவர்.

திருவெண்காடரான பிள்ளையார் காவிரிப்பூம்பட்டினத்துக் கடல் வணிகர் குடி முதல்வராய் விளங்கினவர்

என்றதற்கேற்ப, அவருள்ளம் கடலிற் கலம் அமைத்துச் செலுத்தும் துறையில் நன்கு பயின்றிருந்தது. அதனால் உடம்பைக்கலமாகவும், தீயொழுக்கம், பொய்ம்மை பிணி இடும்பை முதலியவற்றைச் சரக்காகவும் வினையை மீகாமனாகவும் கருப்பையைக் கடற்றுறை நகராகவும், புலன்களைச் சுறா மீனாகவும், பிறவியைக் கடலாகவும், துயரத்தை அலையாகவும், குடும்பத்தை நங்கூரக் கல்லாகவும், நிறையைக் கூம்பாகவும் உணர்வைப் பாயாகவும் உருவகம் செய்வதும் (கோயில் 16) பிறிதோரிடத்தில் உலகைக் கடலாகவும் உடம்பைக் கலமாகவும் தோலைப் பலகையாகவும் என்பை ஆணியாகவும் நரம்பைக் கயிறாகவும் முதுகெலும்பைக் கூம்பாகவும் பொறியைந்தனையும் வாயிலாகவும் வினைகளைச் சரக்காகவும் காம முதலிய குற்றங்களை நிறையாகவும் நெடுநீர் என்னும் குற்றத்தை நங்கூர நாணாகவும் மடியை நங்கூரமாகவும் மனத்தைப் பாயாகவும் ஆசையைக் காற்றாகவும் தான முதலிய குணங்களைத் தீவுகளாகவும் உரைப்பதும் (கழுமல 16), வேறோரிடத்தில், வளியும் பித்து முதலியவற்றைக் காற்றாகவும், நரையை நுரையாகவும், தோலைத் திரையாகவும் இருமலைக் கடல் முழக்காகவும் பசிவெகுளி முதலியவற்றைச் சுறா மீனாகவும், குடரைப் பாம்பாகவும் தசையெலும்புகளைத் திடலாகவும், உடம்பைக் கடலாகவும் துப்புரவைச் சுழிகளாகவும் இறைவன் திருவருளை நாவாயாகவும் ஆர்வத்தைப் பாயாகவும் நிறையைக் கயிறாகவும் ஒருமை யுணர்வைக் கலத்தை யியக்கு பொறியாகவும் காமத்தைப் பாராகவு சுருங்காவுணர்ச்சியைத் துடுப்பாகவும் (ஒற்றி 8) உரைப்பதும் இவர்பால் பெருகக் காணப்படுகின்றன.

இவர் காலத்தே கடலிற் செல்வோர் வட மீனைத் திசை விளக்காக மேற்கொண்டிருந்தமையை 'தூமச் சோதிச்சுடர்க்குறு நிறுத்தி' (ஒன்றி 8) என்றும், பொறிகள் அமைத்து வங்கத்தைச் செலுத்தினமையை, 'மன்னிய வொருமைப் பொறியினை முறுக்கி" (ஒற்றி 8) என்றும், 'இருளுறுபவ்வத்தெந்திரங்கடாஅய், துன்று திரைப்பரப்பிற் குன்று பார்த் தியங்

கியும்" (கோயில் 20) என்றும் வருவன வற்புறுத்துகின்றன. அந்நாளில் மக்கட்குத் திருமணம் செய்யும் வகையில் பெற்றோரே முற்பட்டு நின்றனர். மகட்குத் தக்க மணமகனைத் தேர்ந்து மணஞ்செய்துவைப்பது மகளைப் பெற்றோர் கடனாகும்; இதனை "தன்னைத்தேறி முன்னையோர் கொடுத்த நன்மனைக் கிழத்தி" (இடைமரு 7) என்பதனாலறியலாம். அத்திருமணக் காலத்தில் வந்து கூடும் செல்வர் மணமக்கட்கு மொழி யெழுதுவதாகிய வழக்கம் அடிகள் காலத்தேதோன்றி விட்டது. "திருமணம் புணர்ந்த ஞான்று......திருமணப் பந்தருள் அமரர் முன் புகுந்தறுகு சாத்தி நின், தமர் பெய ரெழுதிய வரி நெடும் புத்தகத், தென்னையும் எழுத வேண்டு வல்" (கோயில் 4) என்பது அவ்வழக்கினை எடுத்துக்காட்டு கிறது. வருவாயுள் ஆறிலொன்று அரசர்க்கு இறுக்கவேண் டிய முறை அடிகள் காலத்து மாறிவிட்டதென்பது, "அரசு கொள் கடமை யாறிலொன்றென்னும் புரைதீர் முறைமை புதுக்கினை" கழுமல 25) என்ற அடிகள் காட்டுகின்றன.

பட்டினத்தார்காலத்தே அவர்க்கு முன்னோர் சிலருடைய வரலாறுகளும் பல இனிய பழமொழிகளும் மக்களிடை பயில வழங்கியிருந்தன. புத்தராகிய சாக்கிய நாயனார் கல்லெறிந்து சிவனை வழிபட்டதும் (இடைமரு 25) திருஞான சம்பந்தர் ஞானப் பாலுண்டு தோடுடைய செவிய னென்றும், பீடுடைய பெம்மான் என்னும் பாடியதும் (கழுமல் 1) திருநாவுக்கரசரும் நம்பியாரூரரும் வித்தகப் பாடல் பாடியதும் (திருவிடை 28) பெருந்துறைப்பிள்ளையாகிய திருவாதவூரரது பேரன்புநெறி யும் (திருவிட 28) பெருஞ் செல்வத்தை அவமதித்துப்போந்த சிவவாக்கியர் சிறப்பும், வரகுணதேவரின் வான்புகழ் வரலா றும் பிறவும் பிள்ளையாரால் விதந்து கூறப்படுகின்றன. இவ ருள் ஞானசம்பந்தர் முதலிய மூவரையும் "வித்தகப் பாடல் முத்திறத்தடியர்" எனவும், திருவாதவூரரைத் "திருந்திய அன்பிற் பெருந்துறைப்பிள்ளை" எனவும் சிவவாக்கியரைச் 'சித்தமார் சிவவாக்கிய தேவர்' எனவும் வரகுணனை, 'பெரிய

அன்பின் வரகுணதேவர்' எனவும் குறித்துரைப்பது வரலாற் றுண்மை பொதிந்த கட்டுரையாகும்.

அந்நாளில் கற்றுவல்ல புலவர்க்கு அறிவாராய்ச்சி வகையில் இன்பந்தந்தவை. எழிசைச்சூழல்போல் இனிய நுட்பம் பொருந்திய அகத்துறைப் பாட்டுக்களாகும். அத்துறையில் பிள்ளையார் பலபாட்டுக்களைப்பாடி வழங்கியுள்ளார். அவை நான்மணிமாலை மும்மணிக்கோவைகளில் உள்ளவற்றினும் மிகுதியாகத் திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் உள்ளன. அவற்றுள் "துணையொத்த கோவை" (73) எனவரும் பாட்டுத் திருக்கோவையார் கருத்தைத்தன்கட்கொண்டு விளங்குவது.

பிள்ளையாரால் இறைவனுக்குரிய மலைகளென, இமயம், கொல்லி, சிராமலை, விந்தம், மந்தரம், இந்திரம், நீலம், வெள்ளை, பரங்குன்றம், மகேந்திரம், வெண்குன்றம், செங்குனறம், நெற்குன்றம், நெடுங்குன்றம், கழுக்குன்றம், முதுகுன்றம் (57---9) முதலியன குறிப்பிடுகின்றன. சிவனுக்குரிய வூர்களென குற்றாலம், நெய்த்தானம், துருத்தி, அப்பர், வேள்விக்குடி, தோணிபுரம், பழனம், ஆரூர், இடைமருது, திருச்சோற்றுத்துறை, நியமம், புகலூர், புறம்பயம், பூவணம், திருவண்காடு, பாச்சில் அதிகை, ஆவடுதுறை, நல்லம், நல்லூர், கடம்பூர், கடம்பந்துறை, புன்கூர், பாராய்த்துறை, எதிர்கொள்பாடி, அண்ணமலை, வல்லம், தமாற்பேறு, பாசூர், அழுந்தூர், பெரும்பேறு, ஒற்றியூர், கச்சியேகம்பம், திருவோத்தூர் திருவாமாத்தூர், புலிவலம் வில்வலம், திருப்பனங்காடு, கொச்சை, மாகறல், காவை, கச்சூர், திருக்காரிகரை, திருவான்மியூர், திருவூறல், திருப்போந்தை, முக்கோணம், திருவாலங்காடு முதலியன குறித்தோதப்படுகின்றன. இவற்றுள் சேரக் கூறற்பாலவாகிய தில்லையையும் காளத்தியையும் தனியே நிறுத்தி, "நடனம்பிரான் உகந் துய்யக் கொண்டானென்று நன்மறையோர், உடன்வந்து மூவா யிரவ ரிறைஞ்சி நிறைந்த உண்மைக், கடனன்றி மற்றறியாத் தில்லையம்பலம்

காளத்தியாம், இடம் எம்பிரான் கச்சியேகம்பமே'' (4) என்று சிறப்பித்துக் கூறுகின்றார். கயிலை யெழுந்தருளுமிடமும் தில்லை நடம்புரியுமிடமுமாயினும், "கயிலை புல்லென விசும்பு வறிதாக'' இறைவன் தில்லையில் நடம்புரிதலால் (கோயில். 32) தில்லையைத் தனித்தும், கயிலைமலை யெனப்படும் (A. R. 160 of 1922) சிறப்புடைமையின் திருக்காளத்தியைத் தில்லையொடு சார்த்தியும் கூறினர் போலும்.

இனி, அவர் வழங்கும் பழமொழிகளைக் காண்டல் வேண்டும். பொற்குன்றம் சேர்ந்த காக்கையும் பொன்னும் என்பதும், இரத குளிகையால் செம்பும் பொன்னும் என்பதும் கருட தியானிக்குக் கண்ணே மருந்து என்பதும் இரவி முன் இருள் நில்லாது என்பதும் பழமொழிகள்; இவற்றை "ஏர்தரும் பொற் கிரிசேர் கருங்கொடியும், பொன்னிறமா மெனச் சொன்ன தொன்மொழியும், ஏதமில் நிறைமதிச் சீதளநிலவால், ஆருமெய்யுருப்பம் தீருமென்பதும், மொழிதரு மிரத குளிகைதற் சேர்ந்த காளிமச் சீருண நீளியற்கனக, மாமெனக் கூறும் தோமறுமொழியும், கருட தியானம் மருடபவந்தோர், நோக்கினில் தவிரும் தீக்கடுவென்றலும், ஆயிரங் கிரணத் தலர் கதிர் முன்னம் பாயிருள் கெடுமெனப் பகர் பழமொழியும், ஆங்கண்மா ஞாலத் தெங்கணு மொப்பா இயலும்'' (கழுமல. 19) என்பர். கற்பசுவைக் கறப்பவரில்லை, எட்டிக் கனிக்கு ஏணியிடார், அரிசிவேண்டி உமி குற்றுவாரில்லை, வெறுங் களருழுது விதை விதையார் (கழுமல. 22) தானே விழுவார் மேல் பார மேற்றலாகாது (திருவிடை. 15), முகம் பாகம் பண்டமும் பாகம் (திருவேகம்ப. 15) என்பன முதலிய பழமொழிகளும் பிள்ளையார் பாட்டில் காணப்படுகின்றன.

பட்டினத்துப்பிள்ளையார் பெருஞ்செல்வத்தைத் துறந்த அருந்துறவியென்பதோடு முத்தமிழ்ப் புலமைபெற்ற வித்தகரென்பதை அவருடைய பாட்டுக்களே காட்டுகின்றன. மக்களுயிர் ஒவ்வொருகணமும் இறக்குநிலையில் இருந்து கொண்டே சிற்றின்பம் விழைந்துநிற்கிற்தென்பது கண்டு,

"கஞ்சு சூழ்பகுவாய் வெஞ்சினமாசுணம், தன்முதன் முருக்க னென்முதற் சூழ்ந்த, நீர்ச்சிறுபாம்புதன் வாய்க்கெதிர்வந்த, தேரையை வவ்வியாங்கு யான்முன், கருவிடைவந்த வொரு நாள் தொடங்கி மறவாமறலிமுன் பிறழ்பேழ்வாய், அயிற்றலை யன்ன எயிற்றிடைக்கிடந்து" (கோயில். 8) வருந்துகிறேன் என்பது, மக்களைப்போலப் பிறந்திறந்துழலும் வானவர் முதலிய சிறு தெய்வவழிபாட்டை இகழ்ந்து விலக்கக்கருதிய பிள்ளையார் வழிபடும்மக்களை பார்த்து, "புறவார்பசும்புற் கறவாக்கற்பக, வாயிடைச்செருகித் தூயநீருதவி, அருஞ்கள வப்பால்கொளப் பெருஞ்கரைவருடும் பேதையர்" (கழுமல. 22) என்பது முதலிய உவமைகளை எடுத்தோதுவதும் பேரருட் பெருங்கடலாக இறைவன் இருப்ப, அவன் அருட்பேற்றுக்கிலக் காகாத மக்கள் செயலுக்கு இறைவன்பால் குற்றமில்லையென் பது விளக்க, "முரியாப்புழுக்கல் முப்பழங்கலந்த, அறுசுவை யடிசிலட்டினி திருப்பப், புசியாதொருவன் பசியால்வருந்து தல், அயினியின்குற்றமன்று வெயிலில்வைத்து, ஆற்றிய தெண்ணீர் நாற்றமிட்டிருப்ப, மடாஅவொருவன் விடா அவேட்கை, தெண்ணீர்க்குற்றமன்று" கண்ணகன்று, தேந் துளிசிதறிப் பூந்துணர்துறுமி, வாலுகங்கிடந்த சோலை கிடப்ப, வெள்ளிடைவெயிலிற் புள்ளிவியர்பொடிப்ப, அடி பெயர்த்திடுவானொருவன், நெடிதுவருந்துதல் நிழல் தீங்கன்றே" (திருவிடை.16) என்பதும்பிறவும் அவரது புலமைவளத்தின் பொற்பை விளக்குவனவாம்.

(தொடரும்.)

# கீட்சு.

(வேலூர்க் காரமுகன்.)

எழில் நிறை கனிவுறும் கவிகள் பலபாடி அழியு முலகில் அழியாப் புகழெய்தி, செறிவும்-செம்மையும்-வளமும்-நிறைவும் நிரம்பிய பீடுடைக் கருத்துக்களைப் பொன்னெழுத்துக்களால் பிறங்கவைத்து இயற்கையினினிமையையும்-ரொமாசின் அருமையையும்—இன்னிசையாலின்னலை இரித்த பறவையினுயர்வையும் ஒளி யொளிரும் மாணிக்கம்போன்ற மாண்புடைச் சொற்களால் உளமுருக வைக்கும் பெற்றிமையுடைய ஆங்கில நல்லிசைக்கவி கீட்சு 1795ல் தோன்றி 1821ல் கல்லறை ஏகினும், மங்கா ஆங்கில இலக்கிய ஒளியாய் ஒளிர்கிருர்.

மேல் புலத்துக் கலையியலுக் குறைவிடமான யவன நாட்டில் பீடுடன் பிறங்கிய ஹோமரின் பேரிலக்கியத்தைக் கற்று, கலையியலினுயர்வை யுணர்ந்து, பின்னர் இடைக் காலத்திய ரோமான்சில் மூழ்கி மகிழ்ந்து, யவன நாட்டிலக்கியத்திலும், கலையியலிலும், அந்நாட்டு வாழ்வியலிலும் பெரிதும்பற்றுக்கொண்டு பேருவகை யெய்தி, இலக்கியக் கலையியல் வாழ்வே புத்துலக வாழ்வெனக்கருதிக் களிப்பிற்றிளைத்து, யவன நாட்டிலக்கியங்களை மொழிப் பெயர்த்து புலவர்களின் உள்ளத்தையும் அறிவையும் நன்கறிந்து, தாமும் அப்பெரும் புலவர்களைப்போன்ற நல்ல எண்ணங்கொண்டுழைத்தமையால் சிறந்த கவியாக விளங்கினுர்.

கலைஞர் ஹேடன் அவர்களிடம் நட்பும்-சிறந்த கவி ஷெல்லி அவர்களின் கூட்டுறவும் இவருக் கிருபத்தொன்ருமாண்டில் கிட்டிற்று; இருபத்திரண்டாமாண்டில் சிறப்பும் உயர்வும் மிளிர்ந்த இவர் தம் பாக்கள் வெளியான பொழுது பாராட்டி வரவேற்காமல் எதிர்த்துப் பழித்துக் கண்டன அம்புகள் எறிந்தமையால், கவிகளை வணைந்த கீட்சு கலங்கி அல்லல்பட்டு அவலமெய்தியபொழுது, இவருடன் பிறந்தார் டாம் கீட்சு மண்ணுலகை விட்டு விண்ணுலகிற்குத்

தெய்வீக யாத்திரை செய்தமையால், வெந்த புண்ணில் வேலம்பு பாய்ந்ததை யொக்கக் கீட்சின் உள்ளத்தில் பெரும் புயலும் மனதில் அனலும் நிலவியமையால் பாரில் புகலிட மின்றிப் பேரிடர்ப்பட்ட ஞான்று, கெழுதகை நண்பன் பிரௌனிடம் புகலிட மடைந்தபொழுது, ஆங்கொரு பூங்கோதையின் பெருங்காதல் இவரை இழுக்கவும், அவ் வணங்கு பானிபிரானி இவர்மீது காதற் கணைகள் சொரிந்து அன்பு நீரும் பாய்ச்சவே, பொற்புடைப் புலவன் கீட்சு அப்பாவைமீது பற்றும், அக்கட்டழகி மீது காதலும் கொண்டதற்கு, அவ்வொண்டொடி உதறித்தள்ளவே, கவி மலர்கள் பூத்த கீட்சின் உள்ளத்தில் காதலி கைவிட்டதின் விளைவாக முறிவாம் முட்புதர்கள் முளைத்து உளமுடைந்து உடல் நலங் குன்றி 1821ல் பூதஉடல் நீத்துப் புகழுட லடைந்தார்.

கவியினுடல் மறைந்தாலும் அவர் தம் உள்ளத்தில் துள்ளிய தெளிந்த கருத்துக்களும்-முதிர்ந்த கற்பனையில் மிளிர்ந்த மாண்புடைச் சிறப்புக்களும் ஆங்கில இலக்கிய மலர் வனத்தில் அழியா அழகு மலர்களாக மிளிர் கின்றன. இவ் வவனியில் இருபத்தைந்தாண்டு களாக வாழ்ந்து மிகச்சிறந்த ரொமாண்டிக் கவியாக விளங்கியதை எண்ணுங்கால் வியப்புறுமலிருக்க முடிய வில்லை. உயரிய கற்பனையிற் றோய்ந்து உணர்ச்சியில் மூழ்கித் தனிப்பெருங் கவியெனத் தகவுடன் திகழ்ந்தார். நோயை நலியவைத்து நலத்தை நல்கும் மருந்தைப் போன் றதே இவருக்குக் கவிகள்; குவலயத்தில் இவர் கண்ட இன்பம் கவிகளில் தான்; இவரது கவலையையும் பிணி யையும் இரித்து இன்பத்தை இவருக் களித்தது கவிக ளன்றி வேறொன்றுமில்லை; உணர்ச்சியா லுழன்று அவல முறுவதை வெறுத்து இன்பத்தையும் அமைதியையும்பெற உயரிய வாழ்க்கையைப் பெரிதும் அவாவினார்.

இவர் அழகின் கவியாதலின் அழகுதான் இவருக்குச் சமயம்; அழகு அனைத்திலு முள்ளதென்றும், அதை உணர்ந்தே தீரவேண்டுமென்றும், அழகில் எல்லையற்ற காத லிருக்கிறதென்றும், அழகுதான் என்றுமுள்ள உண்மை என்றும், இவை உணர்தலே போதுமென்றும் பகர்ந்து, அழகின்மீது அளவு கடந்த அருங்காதல்கொண்ட

கவிகளுள் கீட்சு முதன்மையாக விளங்கினுர். அழகைப் பொறுத்த மட்டில் மில்டன்-ராபர்ட் பிரிட்ஜ்-ஸ்பென் போன்ற பெருங் கவிகள் கீட்சுக்குப் பிறகுதான் நிற் கிருர்கள்; ஏனைய கவிகள் அழகைப் போற்றிப் புகழ்ந் தாலும், கீட்சு அழகை இறைவனுக் கிணையாக்கி, அழகை வழிபட்டு மகிழ்ந்து வாழ்ந்து, அழகில் இறையியலையும் நற்பொருளையும் (தத்துவத்தையும்) கண்டு, இறவாத் தன்மையுடைய அழகில் கலை ஒன்றுவதால் அவ்வழகே மன்பதைக்கு மகிழ்ச்சியை யூட்டும் வீடுபேறு எனக்கண்டு களித்தார்; மன்பதை மரணமெய்தி மறைந்தாலும், அழகு மரண முருமலும், மறையாமலும், அழியாமலும், என்றும் நின்றிலங்கி உலகை உவகையுற வைக்கிறதென்றுணர்ந்து மகிழ்ந்தார்.

இயற்கை அழகிற் கிரையான கீட்சு, ஓவியக் கலைஞர் களுக்கும் ம்க்களுக்கும் மாண்புடைய பெருவிருந்து நல்கும் நிற ஆராய்ச்சியி லீடுபட்டு நிறக்கவி என்று பெயர் பெற்று நிறங்களைப்பற்றி விளக்கங்கள் கூறி நிறைவும் முழுமையு மான செம்மையாம் செந்நிறமே இவருக்கு இன்பமீந்த தென்றியம்பி நிற இயலிற் ருேய்ந் தின்பக் கடலில் மூழ்கி மகிழ்ந்து தனிப் பெருஞ் சிறப்பறிவு பெற்றுக் கலைஞன் என்ற நற்பெயரும் பெற்ருர்.

இவர் யாத்த பாக்களில் உவமையற்ற ஒளி ஒளிரும் மாணிக்கம் போன்ற சொற்ருெடர்கள் மிளிர்தல் கண்கூடு; ஆங்கில மொழியைச் செறிவுடை இனிமைச் சொற்களா லழகுறவைத்து, அம்மொழியை வளர்த்த உயர்வு கீட்சுக் குண்டு. இசைக்கும் இன்பத்திற்கும் இனிய தொடர் புடைய தகவுடைப் பாக்கள் பல பாடியுள்ளார்; வையகத் திற்குக் கனிவுட னீந்த தனிச் சிறப்புடைய பாக்களுள் கலைச் சிறப்புடையவை சிறு கவிகளே. இவைகள் யாவும் முதிர்ந்த அறிவின் பொருள் பொதிந்த பாக்களே. எத் துறையிலுமேகாம லித்துறையி லேகியிருப்பின் வையகத் திலின்றளவும் நிகரற்று அரி ஏறு என இலங்கும் ஷேக்ஸ் பியருக்கடுத்து கீட்சு நின்றிருப்பாரென்று அறிஞர்கள் அறைவது பாராட்டலுக் குரியதே.

அவனிவாழ்வு அல்லல் மலிந்ததென்றும், அவனியில் வாழ்பவர்கள் நஞ்சுண்டிடர்ப்படுகிறவர்களுக் கொப்பான

வர்களென்றும், பொல்லாங்கும் தீங்கும் இன்னலும் உலகில் உலவுகின்றனவென்றும், இத் துன்பங்கள் இன்னிசைப் பறவை நைட்டின் கேலின் கனிவுறும் பாடலால் மறக்கப் படுகின்றனவென்றும், மதுதான் மகிழ்ச்சியை ஈந்து இன்னலை இரிக்கிறதென்றும் பறவைக்குத் துன்பமில்லை யாதலால் மர இலைகளினிடையே மகிழ்வுடன் வீற்றிருந்து மகிழ்ச்சியால் மதுரப்பாட்டுப்பாடி மகிழ்விக்கிறதென்றும், முதுமை எய்தியவர்கள் இடுகாட்டிற்கேக வேண்டுமென்ற நடுக்கத்தால் நடுங்குகின்றனரென்றும், இளைஞர்களோ இயம்பொணுக் காச நோயால் கலங்குகின்றனரென்றும், காதல் நிலேத்தன்றென்றும், காலையில் மலர்ந்த மலர் மாலையில் வாடுவதைப்போல் காதல் கருகிவிடுகிறதென்றும், இத் துன்பங்களினின்று தப்பித்துக்கொள்வதே நல முடைத்தென்றும் அதற்குப் பறவைப்பாட்டே நலமுறும் இன்பவுலகமென்றும், கவி இன்பத்தில் தேங்கித் திளைத்தலே தகவுடைத்தென்றும். ஒளி ஒழிந்து இருள் மலித்த இரவிலே மலர்கள் நிரம்பிய மரத்தடியிலே வீற்றிருந்து உருகிப் பெருகி உளங் குளிர வைக்கும் கனிவுறும் நைட்டின் கேலின் இன்னிசைகேட்டே கல்லறைக் கேகல் களிப்புடைத்தென்றும், வாழ்வுத் துன்பத்திலிருந்து நோயின்றித் தப்புவிப்பது மரணமென்றும், பறவையின் பாட்டும், கனிவுறும் கவியும், மகிழ்வுறும் மதுவும், எழில் திகழும் மலரும் வாழ்வுக்கு இன்பவூற்றுக்களென்று முரைத்து மன்பதையை ஆழச் சிந்திக்க வைக்கும் கீட்சின் பெருமை என்னே!

கீட்சு யாத்த கனிவுறும் காதல் கவிதைகளுள் "இசபெல்லா" என்னும் காழ்த்த மெய்க்காதல் சித்திரம் வையகக்காதல் கவிதைகளுள் போட்டி யிட்டுச் சிறந்த விடம் பெற்றுப் பீடுடன் பிறங்கும் பெற்றிமையைப் பெற்றுள்ளது. ஐரோப்பிய இலக்கியத்திற்கு உயிராயிலங்கும் மாகவிடாண்டேயின் இலக்கியங்களுள் பெட்ரேஸ் என்ற காதலியைப்பற்றிக் கனிந்து பாடிய பாக்கள் உலக இலக்கியத்தின் முத்து என்று புகழடைந்ததைப்போல் கீட்சின் "இசபெல்லா" என்ற காதல் சித்திரம் உலக இலக்கியத்தின் நற்பவளமென்ற புகழெய்தியுள்ளது,

உள்ளத்திலுறுதியும், செறிவும், நிரம்பப்பெற்ற எழில் திகழ் நங்கையாம் இசபெல்லாவின் வீழ்ந்த காதல் வாழ்

வைத் தம் கனிவுறும் கவிதையால் விளக்கப்போந்த வாழ்வினவலத்தை அனைவருமறிந்துணருமாறு ஈடிலா இனிய கவிதைகள் தீட்டி இரு காதலர்களின் உள்ளத் துணர்ச்சிகளை யாவருக்குமூட்டி அனைவர் மனதையும் அனலாக்கும் அருமை என்னே!

இசபெல்லாவும் லொரான் சோவும் காதலித்து உள்ளமும்–கருத்தும்–மனமும் ஒன்றி மெய்க் காதல் மலர் நன்கு மலர்ந்து மணம் கமழ்ந்து திகழ்ந்ததை யறிந்த இசபெல்லாவின் உடன் பிறந்த இரு சகோதரர்கள் உள்ளத்தில் கனல் கதிர்த்து முளைத்தமையால் லொரான் சோவை ஒழித்துவிடச் சதிபுரிந்தனர். லொரான் சோவின் மெய்க் காதலை விளக்கப் போந்த கீட்சு, காதலியை மகிழ்ச்சிப் பிழம்பாக்கி இறைவனிடத்து வரம் கேட்பதைப்போல் காதலன், காதலியை வரம் கேட்பதாக உரைத்தமையால் ஒண்டொடியர் மாட்டுள உயர்வுடைமை என்னே? அஃதே போன்று இசபெல்லாவின் பீடுடைக் காதலை சித்தரிக்கையில் காதலனின் செவ்விதழ்கள் இசைக் கருவியைப் போல் காதலன் பெயரை மிழற்றவில்லை யெனில் அடுத்த நாளிரவைக் காணப் போவதில்லை என்றியம்பிய உயர்வின் சிறப்பென்னே! கண்கள் காதலியலைக் கூறுமாயின் கண்ணீரைக் காதலன் அருந்துவதாகக் கூறியதின் நுண்மை என்னே! காதலால் ஒன்றுபட்ட இருவர் ஒன்றி வாழவும்–உண்ணவும் இயலாமையால், நீலநிற வானத்தைச் செந்நிறத்தா லழகுற வைத்துப் பரிதி மறையும் நேரத்தில்–உழைத்த மக்கள் மகிழ்ந்து இல்லமேகும் காலத்தில்–பறவைகள் பண் நிகர்க்கும் பாக்கள் பாடும் சமயத்தில்–எவருமில்லாத தனியிடத்தில்–எழில் நிறை மரத்தடியில் இருவரும் உரையாடி உகுத்தனர் கண்ணீர்.

இசபெல்லாவின் இரு சகோதரர்கள், மலர் வனத்தில் வீற்றிருந்த லொரான்சோவை அழைத்து விரைந்து சில மைல்கள் செல்ல வேண்டுமென்று கூறியதற் குடன்பட்டு காதலியிருந்த விடமேகி, மாடியிலேறுகையில் காதலியின் காலடி ஒலி கேட்டுவகையெய்தி, காதலியின் கனிவுறும் முகத்தைக் கதவின் சந்தில் கண்டு களிபேருவகையெய்தி மூன்று மணி நேரம் கடந்து மீண்டும் காண்பதாகக்கூறி,

இயம்பொணு இன்னலை ஏற்பதினும் மூன்று மணி நேரப் பிரிவு தாங்கொணுத் துயரமென் றுரைத்துக் காதலியின் முகத்தைப் பார்த்ததும் அவள் முகத்தில் பொலிவு பிறங்கி யதைக் கண்டான்.

லொரொன்சோவை அழைத்துச் சென்ற இருவருடன் ஒரு கொலையாளியும் சென்ருன்; ஆக நால்வரும் சில மைல்கள் சென்றதும் அங்குள்ள காட்டுச்குச் சென்ற னர்; கனிவுறும் காதலுக்குக் காட்டிலே கத்தியால் கொலையுண்டமைதான் லொரான் சோவுக்குப் பரிசாகக் கிட்டியது; லொ்ரான் சோவை வெட்டியதும் புதைத்து விட்டு விரைவில் இல்லம் போந்ததும், அயல் நாட்டுக்கு லொரான்சோ சென்றதாக இசபெல்லாவிடம் இயம் பவே, இசபெல்லா இன்னல் ஆழியில் மூழ்கி, வெந்து, விதவை யாடை யணிந்து திண்டாடவே ஒரு நாளிரவு இசபெல்லா உறங்கிக் கொண்டிருக்கையில் லொரான் சோவின் ஆவி தோன்றி தனக்கு நிகழ்ந்ததைக் கூறவே அடுத்த நாள் ஒரு அணங்கைத் துணைக்கொண்டு மின்னல் வேகத்தில் சென்று குறித்த விடமடைந்து புதையுண்ட பிணக்குழியைத்தோண்டி மெய்க்காதலனின் தலையை எடுத்துக்கொண்டு விரைந்தோடி இல்லம் போந்த தும் தங்கைச்சிப்பால் அத்தலையைச் சீவி தன் அழுகை நீரால் அதைத் தண்மையாக்கி முத்த மிட்டே அழுதவண் ணமாயிருந்தாள். ஒரு சிறு பானையில் அத்தலையை மூடி, ஒரு அகன்ற தட்டில் வைத்து, இரவையும், பகலையும், விண் மீனையும், மதியையும், பரிதியையும், காற்றையும், நீரையும் கருதாமல் தன் அழுகை நீர் பாய்ச்சி அத்தலையை வளமாக் கவே அது ஒரு செடியாக வளர்ந்து, காதலியின் கண்ணீர் உயிரகன்ற காதலனின் தலையைச் செடியாக வளர்த்தாலும் இசபெல்லாவின் துன்பம் எடுத்துரைக்க முடியவில்லை; இதை யுணர்ந்த இசபெல்லாவின் உடன் பிறந்தார்கள் அந்தத் தட்டைத் திருடிவிட்டார்கள்; திருடியதை யறிந்து இசைபெல்லா அவலமெய்தி துன்பத்தில் தோய்ந்து இன்னுயிரிழந்தாள்.

கீட்சு உலகில் உளமுடைந்து துன்பக்கடலில் மூழ்கி இன்னற் கரையில் இடர்ப்பட்டுழன்ருர்; உடன் பிறந்தா னுயிர் நீத்தமையாலும், யாத்தபாக்களுக்கு எதிர்ப்பு ஏற்

# இந்தியக் குடியரசியலும் மக்களியல்பும்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி: துணர் ௨௬, மலர் ௩, பக்கம் 90.)

குடியரசின் குறிக்கோள் ஒவ்வொரு நாட்டு மக்களின் நிலையினையும் மாண்பினையும் உயர்த்துவதால், நாட்டினது அரசியல் வாழ்வை வலியுறுத்துவதற்குரிய வாய்ப்பினையெல்லாம் ஒவ்வொரு மக்களும் உணர்வாட்சியுடன் தம் திறமை தோன்ற தன்னலம் குறுக்கிடாது இயல்பாய் உபயோகித்துக் கொள்ளுதல்வேண்டும். இத்தகைய ஆர்வமும் உறுதியுமே

---

பட்டமையாலும், காதலித்த காரிகை கைவிட்டமையாலும் அவனியீல் இவருக்கு அவலமே பரிசாகக்கிடைத்தமையால், இலங்கும் இயற்கையும், இசைபாடி இன்புற வைக்கும் நைட்டின்கேலும், கனிவைக்கொடுக்கும் கவிதைகளும், தெவிட்டா தினிக்கும் தேன் மதுவும், நிறத்தாலும்-நறுநாற்றத்தாலும் - மதுவாலும் - மென்மையாலும் - அசைந்தாடும் இன்னொலியாலும் மகிழ்வை யூட்டும் மலரும் இவருக்குப் புகலிடமாம். குவலயத்தில் கவலையுற்ற கீட்சின் விழிக்கு இயற்கை நிறமும் - செவிக்கு இயற்கை ஒலியும் - மூக்கிற்கு நறுநாற்றப் பொருளும் - மெய்க்கு மென்மை இலையும் - நாவுக்கு இனிய பொருளும் முறையே விருந்தாம்.

ரொமான்ஸ் கவியாகவும் காதலியலைச் சித்தரிப்பதில் சிறந்த கவியாகவும் அழகுக் கவியாகவும் நிறக்கவியாகவும் விளங்கி இசபெல்லா என்ற கனிவுறும் காதல் சித்திரத்தைத் தீட்டுகையில் அவலத்தின் ஆழத்தையும், துன்பத்தின் எல்லையையும், மறிவின் கொடுமையையும் கூறி, காதலியைக் களிப்புப் பிழம்பாக்கி அதையே கடவுளாக்கி, காதலனின் செவ்விதழைப் பண் நிகர்க்கும் இசைக்கருவியாக்கி மெய்க் காதலுக்கு மரணமே பரிசென்றும் காதலர் இறந்தாலும் காதல் இறவாத்தன்மையதென்றும் அக்காதலே கடவுளென்றும் கூறி, மங்காக்கவி ஒளியாகத் தங்கம்போல் மாநிலத்தில் திகழும் கீட்சு வாழ்க!

நாட்டிற்குப் பெரும் பயன்களை விளைவிக்கும். அரசியற்றுறையில் கடையாயினரும், ஆறலைக்கும் தன்மையரும் ஒரோவழி சட்டமன்றிலிலும், அமைச்சர் குழுவிலும் இடம் பெற்றுவிடினும், அதற்காகக் குடியரசின் உறுப்பினராய தனி மக்கள் தமதாற்றலைப் பாழாக்கி, பற்றின்மையால், உடலை உணர்வற்றதாகவும், உணர்வை பயனற்றதாகவும் செய்து அரசியலை விட்டு புறமேயிருந்து ஏசற்றிருத்தலிலும் அயர்த்தலிலும் பயனின்று. தம் கொள்கைகளில் மாறுத்துணிவு கொண்டு குடியரசு மக்கள், அரசியலமைப்பின் வலிக்கேதுவாகிய சமுதாய இயக்கங்களின் வழி நாட்டின் பெருமையினைக் காக்க அருஞ்செயல்களை ஆற்றி, நாட்டின் ஒள்ளியார்பால் நாட்டை ஒப்படைக்கவேண்டும். இஃதின்மை குரங்கின் கை கொள்ளி கொடுத்தலாகும்.

அரசியல்வையினியல்பும், அவையத்தார் செவ்விய பண்பும் அரசியலமைப்பினை நேர்மையான துறையில் செலுத்தி, குடியரசியலை, செயலாற்றும் முறையில் இயங்கச்செய்யும். நினைவு, கருத்து செயல் வேற்றுமையுடைய நிலவுலகின் கண், அரசியல் பொருள்களைப்பற்றிய கருத்துக்களில் மாறுபாடுகள் ஏற்படுவது இயல்பு. இத்தகைய மாறுபாடு கருத்துடைய வகுப்பினர்களை தலையெடுக்க வொட்டாது ஆழ்த்திவிடுவதினுன், அரசியற் பொறுப்புடையார்க்கு எவ்வித நன்மையும் பயவாது. இம்முறை, ஆட்சியினை நலியச்செய்யும். ஆகவே, அரசியல் முழுப்பொறுப்பினை வாய்ந்தவர்கள் பாலுள்ளும் வேற்றுமை காணுதிருக்க அன்னுர் தம்மொடு மாறுபட்ட அரசியல் கருத்தினரை ஆழ்த்தியும் ஒழித்தும் விடாது அவர்களது கருத்தினைத்தக்கவாறு ஆயும் முறையில் வேற்றுமைக்குரியதை நீக்கி, நற்றம் கொண்டு அன்னுரது பெருமிதத்தை அடக்க வேண்டும். இதனுன் ஒரோவழி மாற்றுக்கருத்து, இறுதியில், நாட்டின் நலத்தைப் பேணும் ஆட்சிக்கு மாட்சி நிலை தருமென்பது புலனுயிற்று. எனவே இடித்து உண்மை கூறுவாரைப் போற்றும் முறை

அரசியலினை வலியுறுத்தலும், நாட்டுக்குள் உட்பகைமையில்லாமை இன்பத்துக்கேது வாதலும் பெறப்படும்.

நாட்டு மக்களின் பெரும்பான்மையான உரிமைச் சீட்டுகளைப் பயனுறும் துறையில் செலுத்துவதற்குப் பிற கட்சிகளும், கட்சிக்கொள்கைகளும் இருக்க வேண்டியது விரும்பத்தகுந்தது. கட்சிக்கொள்கைகளையும் திட்டங்களையும் நடைமுறையில் ஆட்சிக்குக் கொணர்தற்குப் பிற கட்சிகள் இருந்தால்தான், குடியரசு அச்சமின்றிச்செயலாற்றவேண்டிய நிலைமை நிலையாக ஏற்படும். ஆட்சி செலுத்துங்கால் எதிர்ப்பை வரவேற்கினும், இக்கட்சிகளின் துணையும் ஆதரவும, அகநேய உணர்வும் குடியாட்சிக்கு அமையுமாயின் குடியாட்சி முழுவலியுடன் திகழுமென்பதில் சிறிதும், ஐயமில்லை. இத்தகைய கட்சிகள் நாட்டில் உறழ்கொண்டு குடியரசியலுக்கு நேர் முரணாகப் புரட்சி எழுப்பின், அஃது குரங்கு அப்பம் பிரித்த கானதக்கு எடுத்துக்காட்டாகவே அமைந்து மக்கட்டலைமையுடைய நாட்டின் எதிர்கால வாழ்வும், உரிமையும் வருந்தத்தக்க நிலையெய்திக் குலையுமென்க. மற்றும், உயிரியல்புகளும் ஒடுங்கி மக்கட்பிறவியும் பாழாகும்.

அரசியலமைப்பிற்கு மக்கள் உரிமை எவ்வளவு இன்றியமையாததாயிருக்கின்றதோ, அஃதாமாறு பொருள் நிலை அமைப்பிற்கும். உடைமையின் உரிமை அமைந்துள்ளது. சிந்திக்கின், உடைமை, உரிமை யுணர்வினை இயற்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது. புற உடைமைப் பொருள்களின் உரிமையினைத் தக்கவாறு பேணிப்போற்றுவது குடியாட்சியின் அலுவலாகும். நிலம் குடிமக்கட்கே உரித்து. நிலத்தினின்று உணவை, பயிர் வளர்ப்பதின் வழி உழைத்துப் பெருக்கி, உயிரை வளர்ப்பது குடிமக்களது பிறப்புரிமையாகும். கருத்தாய்ப்ப யிரை வளர்த்துக் காக்கும் நிலத்திற்குரியவர் தம்மில் மனமொருப்பட்டு தமது நிலத்தை விலைத்

திட்டு செய்து தரும் உரிமையினையும், பிறர் அதனைக்கொள் வதின்வழி எழும் உரிமைகளைக் காப்பாற்றும் முறைகளையும் இந்திய அரசியல் திட்டம் அளிக்கின்றது. நிலத்தைப் பிறர் வலிதிற் கொண்டிடாத உரிமைகளையகற்றி, புற உடைமைப் பொருள்களின் உரிமையினை நிலைநாட்ட மக்கள்பால் இந்திய அரசியல் திட்டம் ஆற்றல் வாய்ந்த ஏதுகரத்தினை ஒப் படைத்துள்ளது. அந்தவழி வகையினை உறுதியின் உரத் தால் கைக்கொள்வது குடியரசின் மக்களுக்குற்ற கடமை யாகும். அரசியல் சட்டம் அமைத்துள்ள அறங்கூறும் பேரவையம், இத்தகைய உயிர்ப்பாற்றல் மேவிய உரிமை களைக்காத்துப் பயன்றரும் பெற்றிமை வாய்ந்துள்ளது. உலகி யலும், உரிமையியலும் அடிப்படை அரணாகக் கொண்டு குடியரசின் அவையம் திறவிதாய் அமைந்திருப்பதினுன், இப்பேரவையம் உயிர்ப்பாற்றலும் ஒளியுங்கொண்டு எதிர் நிற்பதெதூஉமின்றி பேரியக்கங் காணும் இயற்கை இயல்பு பெற்றுள்ளது, உரிமைகளுக்கு உறு கருவியாய் நின்று எக் காலும் பயன்றரும் அறப்பேரவையம் குடியரசியல் வாழ்க் கைக்குப் பெரிதும் பயன்பட்டு எத்துணை இன்றியமையாமை யும் முதன்மையும் பெற்றுளதென்பது துணிதல் வேண்டும். மனவமைதி தந்து வாழ்க்கைக்கு ஊக்கம் தரும் உரிமையழகு பற்றிய வழக்களுக்கு உயிர்ப்பூட்டும் இத்தகைய பேரவைய மில்லையேல், உலகு, வழிதுறையின்றி விலங்குணர்ச்சி விரவிய வெறுக்துறுகலுங்தூறும் நிறைந்த காடாக மாறிக் கெடுமென் பதில் ஐயமில்லை.

ஒரு பகுதியினர் நலனைக்கருதி, உடைமை உரிமையினை இணைப்பதும், தாழ்த்துவதும், ஒழிப்பதும் தவருகும். ஏனெனில் இவ்வுரிமைகள் இவைகளினுற் பறிக்கப்பட்டால், உலகவாழ்வின் சகல தொழிற்றுறைகள் யாவும் பேணப் படாது பயனற்றும், மக்களது ஆற்றல் சிறைபட்டும் நிற்க, உலகம் வேதனை விடுதியாக மாறும். பொருளாதாரத்தின்

துறையின் அமைப்பு பொது உடைமையில் சரி சமமாக நிலை யாய் நிற்பது அரியதாய் ஒழியும். மற்றும் பொது உடைமை யில் அமைதி அகத்தும் புறத்தும் நிலவாது இலதாய் முடி யும். உருவம், அறிவு, இச்சை செயல், குணம், ஆற்றல், இனிய குரல். முதலானவை மக்கள்பால் சமமாகக் காணப் படுவதில்லை யாதலான் இயற்கை சரிசமமின்மையினை நீக்கி, அந்நிலையில் செயற்கை சரி சமத்துவத்தை நிலை நாட்ட முயல் விப்பது ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி மூடி வைத் திட்டதோடொக்கும். மற்றும் முற்கூறப்பட்ட இயற்கை நலன்களின் துணைவழி உழைத்து ஈட்டிய உடைமைகளைச் செயற்கையின் வழி சரி சமமாக்குதல் முடிவில் நரி விருத்த மதாகுதல் கண்கூடு. மற்றும் அரசியல் ஒளியினை இருளாக் கும் பொதுவுடைமைக் கொள்கையினை அரசியலுட் புகுத் தும் நாடுகளின் அடிச்சுவட்டினைப் பின்பற்றுவது, குட்டித் திரட்கரடியாறொழுகக் கோன் கட்டிப்புதைத்த கதை யொக்கும். இடையன், ஆற்றின் வழிபடூஉம் கரடியை ஆடென்றும், கரடி, அவனை ஆறு கடத்தும் புனையென் றும் மாறுபாடாகக் கருதி ஒழுகினாற்போல, அமைதி காண இயலாத பொதுவுடைமைக் கொள்கைகளில் தடுமாறி நோக் கறியாமையில் உழல்வதினான் இறுதியில் துன்பமேயன்றி எக்காலும் இன்ப மன்றென்பது, தேர்ந்த மெய்ம்மையாகும்.

நம் நாட்டில் இயற்கைச் சூழல் பார்க்குமிடந்தோறும் எதிர்த்து நிற்பதினான், அதனைத் தக்கவாறு மக்கள் காளும் உணவுக்கலமாக நிற்கவகை செய்யாது, பிறர் உடைமைப் பொருள்களின் உரிமையினைப் பறிப்பதில் நாட்டம் கொள்வது எத்துணை இரங்கற்பாலது. மக்கள் முயற்றின்மை யொன்றே இன்மை புகுத்தி உணவின் முட்டுப்பாட்டை உண்டாக்குத லான், செயன் முயற்சிகட்கு வாய்ப்பும் வழியும் கோலும் இயலாற்றலுடையார் தாம் என்றும் நிலைபெறும் உரிமை யினை யுணர்ந்து நாட்டின் இயல்பான உணவுச் செழுமையை

பயன் கொண்டவராவர். பொருளாதார வாழ்க்கை மக்கள் நிலையின் தேவைகளைப் பொறுத்து நிற்பதினன், அதற்கு ஊறு நேராவாறு நாட்டு மக்கள் பெருந் தகவானும், பெரு நடையானும், உண்மை யொழுக்க நெறியானும், அனைவருக்கும் பெரும்பயனுய்த் திகழ்ந்து, உயிர்வாழ்க்கையை நலனும் பயனுமுடையதாக்கி விளக்கஞ்செய்யவேண்டிய பொறுப்புடையராகின்றார்.

வாழ்க்கை வளர்ச்சிக்குரிய வழித்துணை கலை யுணர்ச்சியாதலான், மொழியியலுரிமை நாட்டு மக்களது உயிர் நிலையாம். இன்பமும் அமைதியும் பயக்கும் இயலுரிமை கெழீ இயதாய தாய்மொழிபால் மக்கள் உறுதியும் விழிப்புங் கொண்டு மொழிப்பண்பினை உயிரோடியலுறுந்தொடர்பாகக் கொண்டு வளனுறச் செய்தல் விரும்பத்தகுந்த இயல்பாகும். இவ்வியல்பை இந்திய அரசியல் திட்டம் வற்புறுத்துவதினன் மக்கள் வாழ்க்கை பல் துறைகளிலும் விளக்கமும் வெற்றியுமுடையதாய்த் திகழும்.

நாட்டுமக்களால் தழுவப்படும் உரிமைகளையும் கடமையுணர்ச்சிகளையும் பற்றிய சீரிய கருத்துகளும், அரசியல் செந்நெறிக்கு ஆக்கந் தருதற்கான முறைகளைக் கைக்கொளும் சால்புகளும், வாழ்க்கைத் துறைகளைச் செம்மைப் படுத்துங் கலங்கரை விளக்கங்களாக இவ்வரசியல் திட்டத்தின்கண், ஒழுங்குபட அமைந்திருப்பதினன், இக்குடியரசியலின் திட்டம், பேரிலக்கியமாக விளங்குவதோடமையாது, பொது மக்கள் பொறுப்பினும் ஆதரவினுலும் பெரிதும் வேரூன்றி வன்மை மேவி விளங்குமென்க.